செ.வெ. எண்: 35 நாள்: 13.01.2012

# செய்தி வெளியீடு

## பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 128 போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு 7 கோடியே 41 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை !

திறமையான, பொறுப்புள்ள மற்றும் மக்கள் நலன் மீது மிகுந்த அக்கறை காட்டி அவர்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதுதான் ஒரு அரசின் மகத்தான இலக்கணம் என்ற கோட்பாட்டின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. அதற்கேற்ப, தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.

குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனைப் பணிக்குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் 1 இலட்சத்து 27 ஆயிரத்து 128 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

இந்தியாவிலேயே முதன்மை நிலைக்கு தமிழகத்தை அழைத்துச் செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர்களும், பணியாளர்களும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள்

என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் சிறப்பான வாழ்க்கைத் தரம் அமைத்துக் கொடுத்தால்தான், தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தி அவர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செயல்பட முடியும்.

அதற்கேற்ற வகையில், வரும் பொங்கல் திருநாளையொட்டி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்களில், 2011ஆம் ஆண்டில் 91 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை பணிபுரிந்த பணியாளர்களுக்கு 85 ரூபாய் வீதமும்;

151 நாட்கள் முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்த பணியாளர்களுக்கு 195 ரூபாய் வீதமும்;

200 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த பணியாளர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் பரிசாக ''செயல்திறன் ஊக்கத் தொகை (Performance Incentive)'' வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த ஆணையின் காரணமாகப் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் 1 இலட்சத்து 27 ஆயிரத்து 128 பணியாளர்களுக்கு, மொத்தம் 7 கோடியே 41 இலட்சம் ரூபாய் செயல்திறன் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

****

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**